2023 அக்டோபர் 9]

ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர்களால் சொல்லப்படுகின்ற இந்த இரண்டு பாலங்களுக்கு முன்னுரிமை அளித்து, இந்த ஆண்டே அதற்கு வேண்டிய நிதி ஒதுக்கீட்டை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் பெற்று, மேம்பாலங்கள் கட்டுகின்ற பணிகளை நாங்கள் தொடங்குவோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 205, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

205—

நியாய விலைக் கடை

***54657—திரு. ஒய். பிரகாஷ்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓசூர் தொகுதி, விநாயகபுரம் பகுதியில் நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மாநகராட்சியில் கே.கே.127, ஓசூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும், பஸ்தி முழு நேர நியாய விலைக் கடையிலிருந்து விநாயகபுரத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ் அவர்கள்.*

திரு. ஒய். பிரகாஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஓசூர் சட்டமன்றத் தொகுதி, ஓசூர் மாநகராட்சிக்குட்பட்ட விநாயகபுரத்தில் 250 குடும்ப அட்டைகள் உள்ளன. அவர்கள் ரேஷன் பொருள்கள் வாங்க வேண்டுமென்று சொன்னால்,* NGO *காலனிக்குச் சென்று வாங்க*

வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. NGO காலனி பாகலூர்-ஓசூர் நெடுஞ்சாலையில் இருக்கக்கூடிய காரணத்தினால், போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கக்கூடிய காரணத்தினால், விநாயகபுரம் பகுதியிலே ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓசூர் மாநகராட்சியிலுள்ள ஓசூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்படக்கூடிய பஸ்தி முழு நேர நியாய விலைக் கடையில் இருக்கக்கூடிய மொத்த குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 1,703 ஆகும். இதில், ஏற்கெனவே ஆவலப்பள்ளி என்ற இடத்தில் 335 குடும்ப அட்டைகளுடன் முதலாவது பகுதிநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. மேலும், பஸ்தி முழு நேர நியாய விலைக் கடையிலிருந்து இரண்டாவது பகுதிநேர நியாய விலைக் கடையாக மூவேந்தர் நகர் கடை 730 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. ஆகவே, ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரும் விநாயகபுரம் பகுதியில் எங்களுக்குக் கிடைத்திருக்கின்ற தகவலின் அடிப்படையில், 65 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதாலும், ஒரு பிரதான கடையையொட்டி, இரண்டிற்கு மேற்பட்ட பகுதிநேர நியாய விலைக் கடைகள் இயங்குவதாலும், மூன்றாவது பகுதிநேர நியாய விலைக் கடை துவங்குவதற்கு வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ் அவர்கள்.*

திரு. ஒய். பிரகாஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போல, ஓசூர் சட்டமன்றத் தொகுதி, ஓசூர் ஒன்றியத்தில் மாசிநாயக்கனபள்ளி ஊராட்சியில்* A.T. *முதுகானபள்ளி கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்தில் 115 குடும்ப அட்டைகள் மட்டும்தான் இருக்கின்றன.*

2023 அக்டோபர் 9]

ஆனால், 6 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று பொருள்களை வாங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதைப்போல, சேவகானபள்ளி ஊராட்சியில் கொடியாளம் கிராமத்தில் 150 குடும்ப அட்டைகள் உள்ளன. அவர்களும் 3.5 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று அந்தப் பொருள்களை வாங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, மக்கள் நலனைக் கருதி இந்த இரண்டு கடைகளையும் பிரித்துத் தர அரசு முன் வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு பிரதான கடை என்று சொல்கின்றபொழுது 500 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமல் இருக்க வேண்டும். அந்த எண்ணிக்கையிலிருந்து பகுதி நேர நியாய விலைக் கடைகள் கொடுக்கின்ற நேரத்தில், 1.5 கிலோ மீட்டராவது குறைந்தபட்ச தூரம் இருக்க வேண்டும். அந்தப் பகுதியில் 150 குடும்ப அட்டைதாரர்கள் இருக்க வேண்டும். அப்படியிருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 206, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன், மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

206—

கால்நடை மருந்தகம்

***57819—திரு. அ. சௌந்தரபாண்டியன்:**

மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி தொகுதி, பெருவளநல்லூர் ஊராட்சியில் புதியதாகக் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?